விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து | (14.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 270

சங்கு. 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 29 | செவ்வாய்க்கிழமை

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத் சீமெந்து தில் முதலாம்தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## இந்திய கடற்படைத் தளபதி அருண் இரகசியமாக யாழ். வரத் திட்டம்?

(கொழும்பு)

இலங்கைக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்திருக்கும் இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் யாழ்.குடாநாட்டுக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை வந்திருக்கும் கடற்படைத் தளபதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன், திருகோணமலை துறைமுகப் பாதுகாப்புக் குறித்தும் அவர் நேரில் சென்று ஆராயவுள்ளார்.இலங்கைக் கடற்படை பயிற்சிக் கல்லூரிக்கும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்து தூதுவர் சுசன் நேற்று வடமராட்சி சென்றார்

(யாழ்ப்பாணம்)

நெதர்லாந்துத் தூதுவர் சுசன் பிலான்காற் நேற்று வடமராட்சிக்கு விஜயம் செய்தார்.

வடமராட்சிக்குச் சென்ற அவர் இந்து கலாசார அமைச்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான கணினிப் பயிற்சி நிலையத்திற்கு நிக்கொட் சமூக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஐந்து கணினிகளைக் கையளித்தார்.

வல்லிபுரஆழ்வார் தேவஸ்தான அறங்காவலர்சபைத் தலைவர் அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படும்

# யாழ்ப்பாணத்தில் அடுத்த ஆண்டு சமுர்த்தித் திட்டம் அமுலாகும்!



## யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதியின் ஆலோசகர் ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது வழங்கப்பட்டுவரும் நிவாரணம் நிறுத்தப்பட்டாலும் நிவாரணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைகளுக்கே பயன்படுத்தப்படும் என்று ஜனாதிபதியின் ஆலோசகரும், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளருமான ஹரீம் பீரிஸ் உறுதியளித்துள்ளார்.**

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளை நேரில் சென்று பார்வையிடுவதற்காக நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதியின் ஆலோசகரும், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்ட உறுதிமொழியை அளித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்திருந்த ஹரீம் பீரிஸூம் அவரது செயலாளரும் நேற்றுமாலை யாழ். செயலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசாங்கம் தற்போது விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டுவரும் சமாதான செயற்பாடுகளை அரசாங்கத்தின் சமாதான செயலகத்தின் மூலமாகவே மேற்கொண்டுவருகிறது. கடந்த ஏப்பிரல் மாதம் முதல் சமாதானப் பேச்சுக்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அபிவிருத்தித் திட்டங்களை ஹரீம் பீரிஸ் குழுவினர் நேரில் பார்வையிட்டனர்

யாழ். குடாநாட்டில் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் சென்று பார்வையிடும் பொருட்டு ஜனாதிபதியின் பேச்சாளரும், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த ஹரீம் பீரிஸூம் அவரது செயலாளரும் யாழ். குடாநாட்டில் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை சகிதம் நேரில் சென்று பார்வையிட்டார்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் தெல்லிப்பழை புற்றுநோயாளர் சிகிச்சை நிலையம், குடாநாட்டில் புனரமைக்கப்படவேண்டிய பாலங்கள், வீடமைப்புத் திட்டங்கள், நீர்ப்பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவற்றையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் உழவு இயந்திர பெட்டி கவிழ்ந்தது!

### மூன்று பக்தர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்வீதியில் உழவு இயந்திரப்பெட்டி கவிழ்ந்ததில் மூன்றுபேர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர்க்கந்தன் ஆலயத் தேர்த் திருவிழாவான நேற்று பறவைக்காவடி எடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரப்பெட்டியே இவ்வாறு கவிழ்ந்துள்ளது.

காவடி எடுத்த பக்தரை இறக்கிவிட்டுத் திரும்பும்போதே முன்வீதியில் உழவு இயநதிரப்பெட்டி கவிழ்ந்தது. இதன்போது ஒரு பெண உட்பட மூவர் காயமடைந்தனர். (ச-50)

## எரிக் சோல் நேற்று இலங்கை வந்தார்

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் நேற்றிரவு 8 மணியளவில் கொழும்பு வந்தடைந்தார்.. தடைப்பட்டுப் போயுள்ள சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான இறுதிமுடிவு மேற்கொள்வதற்கு உரிய தரப்பினருடன் ஆலோசிப்பதற்காகவே அவரது இலங்கை விஜயம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி உட்பட அரசாங்க

(10 ஆம் பக்கம் பார்க்க)



## புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மாற்றங்கள் எதுவுமின்றி நடைமுறைப்படுத்துவோம்

### மஹியங்கனையில் ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

தற்போது நிலவிவரும் வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத் திட்டங்களால் எந்தவிதமான பயனையும் பெறமுடியாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மஹியங்கனைப் பிரதேசத்தில் நேற்று மாலை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துவைத்துப் பேசும்போதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

தேசிய நலன்கருதி மக்கள் தேசியப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் தியாக மனப்பான்மையுடன் நடந்துகொள்ளவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் எதுவித மாற்றங்களும், திருத்தங்களுமின்றி அதனை நடைமுறைப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இந்நிலையில் இலங்கை இராணுவத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கவும் நாம் நடவடிக்கை எடுத்துவந்துள்ளோம் என்றும் கூறிய ஜனாதிபதி, இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டால்தான் நாம் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்ல முடியுமென்று கூறினார். (ம)

# செச்னியாவில் குண்டுத் தாக்குதல் 9 ரஷ்யப் படையினர் பலி; பலர் காயம்

மொஸ்கோ)

செச்னிய தலைநகர் கிரேஸ்னியின் தெற்குப்பகுதியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் 9 ரஷ்ய இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளதுடன் பல இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

கிரேஸ்னியின் தெற்குப்பகுதியூடாக ரோநதில் சென்றுகொண்டிருந்த ரஷ்ய இராணுவத்தினரின் வாகனத் தொடரணி மீதே குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

இக் குண்டுத் தாக்குதலையடுத்து உதவிகளை வழங்குவதற்காக சம்பவ இடத்திற்கு விரைந்த வேறு ஒரு இராணுவ வாகனத் தொடரணி மீதும் கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தப்பட்டிருப்பதாக அறிவித்துள்ள செச்னிய அரச தரப்பினர் யார் இத்தாக்குதலை நடத்தினர் என்பது குறித்து எதுவித தகவல்களையும் வெளியிடவில்லை.

எனினும் இத்தாக்கு தலை செச்னிய தீவிர வாதிகளே நடத்தியிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள போதிலும் தம்மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்பது குறித்து ரஷ்ய இராணுவத்தின் எதுவித தகவல்களையும் வெளியிடவில்லை.

எனினும், இக்குண்டுத் தாக்குதலையடுத்து ரஷ்ய படைகள் தமது பாதுகாப்பினை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. (ப)

ஆப்கானிஸ்தானில்

## ஐக்கியநாடுகள் சபையின் இரு அலுவலகங்கள் தீக்கிரை

(ஹெராத்)

ஆப்கானிஸ்தானின் ஹெராத் மாகாண ஆளுநர் இஸ்மைல்ஹான் அந்நாட்டு ஜனாதிபதி ஹமீர்ஹர்சானால் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து, இஸ்மைல் ஹானின் ஆதரவாளர்கள் கூடிப் பெருமெடுப்பிலான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ் ஆர்ப்பாட்டங்களின்போது ஆப்கானில் உள்ள இரு ஐக்கியநாடுகள் சபையின் அலுவலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டதுடன், பாகிஸ்தானின் தூதுவராலயமும் அடித்து நொருக்கப்பட்டது.

இதனையடுத்து ஆப்கான் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து ஆர்பபாட்டக்காரர்கள் மீது நடத்திய தாக்குதலில் 50ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் ரயர்களைப் போட்டு எரித்ததால் ஹெராத் மாகாணத்தின் இயல்பான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. (ப)

ஈரான், தென்கொரியாவின்

## அணுவாயுத உற்பத்தி குறித்து ஐக்கியநாடுகள் சபை தீவிர கவனம்

அணுவாயுதத் திட்டங்கள் குறிதது உண்மை நிலையை வெளியிட தென்கொரியா தவறியிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அணுசக்தி நிறுவன அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தென்கொரியாவின் அணுவாயுத உற்பத்திகள் குறித்து ஆராய ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை அங்கு செல்வதற்கு தென்கொரிய அரசு மறுப்புத் தெரிவித்த நிலையில் இது குறித்து பலத்த சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் தன்னிடம் உள்ள அணுவாயுதங்களை சுத்திகரிப்புச் செய்வதற்காக யுரேனிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதனை தென்கொரியா ஒப்புக் கொண்டுள்ளது.

அத்துடன் யூரேனியமும் அங்கு உற்பத்தி செய்யப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஈரானின் அணுகுண்டு தயாரிப்பு முயற்சியை ஈரான் கைவிடவேண்டும என ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அங்கதது நாடுகளான பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி என்பன முன் வைத்துள்ள தீர்மானத்தின் பிரகாரம் அணுவாயுத தயாரிப்பு முயற்சிகளை ஈரான் கைவிட வேண்டும என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

தனது அணுகுண்டு தயாரிப்பு குறித்த திட்டங்களை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பிவைக்கவிலலை என்பதைச் சுட்டிக்காட்டியே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது. (ப)






இளவரசர் அல்முக்தாதி பில்லாபோல்கியாவிற்கும் சாராசலே ஹிக்கும் வெகுச் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. விமரிசையாக நடைபெற்ற இந்த திருமண நிகழ்ச்சியில் உலக நாடுகளைச் சேர்ந்த பல முக்கிய தலைவர்கள் கலந்து கொண் ...னர். திருமணக் கோலத் தில் மணமக்கள்.

ஈராக்கில் வன்முறைகள்

## பல முனைகளில் தீவிரவாதிகள் தாக்குதல் அமெரிக்கப் படைகளும் பதில் தாக்குதல்

### 170 ற்கும் மேற்பட்டோர் பலி

ஈராக்கின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் வன்முறைகள் காரணமாக 170 பேர் பலியாகியுள்ளனர்.

ஈராக்கின் தலைநகர் பாக்தாத் உட்பட முக்கிய இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கி சண்டைகள், கார்க் குண்டுத் தாக்குதல்கள், என்பவற்றிலேயே இந்த 170 பேரும் பலியாகியுள்ளதாகவும் பாக்தாத் நகால் மட்டும் நேற்று முன்தினம் 7 கார் குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

இச்சம்பவங்களையடுத்து ஈராக்கில் அமெரிக்க இராணுவம் த்னது பாதுகாப்பிணைப பலப்படுதியுள்ளது.

கடந்த சில மாதங்களாக ஓரளவு அடங்கிக் கிடந்த முஸ்லிம் தீவிரவாதிகள் திடீரென செய்த கிளர்ச்சி நடவடிக்கைகளினாலேயே இவ் உயிரிழப்பு ஏற்பட்டிருப்பதாக அங்கு நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

எனினும் தொடர்ந்து அங்கு மோதல்களும் வன்முறைகளும் அங்காங்கே இடம்பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றும் ஈராக் தலைநகர் பக்தாத்தில் தீவிரவாதிகளுக்கும் அமெரிக்க கூட்டணிப் படைகளுக்குமிடையே தொடர்ந்து மோதல் இடம்பெற்றுவருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம் மோதல்களை தீவிரவாதிகள் தரப்பே தொடங்கியதாகவும் பலமுனைகளிலிருந்தும் தீவிர வாதிகள் தாக்குவாகவும் அமெரிக்கப் படையதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ப)

## பிரிட்டனில் ஆதரவை இழந்துவருகிறார் புஷ்

நவம்பர் மாதம் அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரி, ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைத் தோற்கடிக்க வேண்டும் என்று பெரும்பாலான பிரித்தானியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

பிரிட்டனில் 'ரைம்ஸ்' பத்திரிகை நேற்றுமுன் தினம் எடுத்த வாக்கெடுப்பு ஒன்றில் இவ் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்பட்டவர்களில 52 சதவீதமானோர் ஜோன்ஹெரிக்கும் 29 சத வீதமானோர் ஜனாதிபதி புஷ்ஷுற்கும் ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

ஜனாதிபதி புஷ்ஷின் நெருங்கிய நட்பு நாடு என்று கருதப்படும் பிரிட்டனில் புஷ் ஆதரவு இழந்து வருவதை இந்த அபிப்பிராய வாக்கெடுப்பு தெரிவிக்கிறது.

இளைஞர் - முதியோர் ஆகிய அனைவரும் சமூக அரசியல் வேறுபாடுகளின்றி வேட்பாளர் ஹெரிக்கு ஆதரவு தெரிவித்ததாக ரைம்ஸ் பத்திரிகையின் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் தெரியவந்திருக்கிறது. (யே)

வடகொரியா

## அணுகுண்டுப் பரிசோதனை அயல்நாடுகள் உஷார் நிலை

வடகொரியா அதிபயங்கர அணுகுண் ...ான்றைப் பரிசோதிததிருப்பதாக தகவல்கள் ...ளியாகியுள்ளன.

வடகொரியாவில் கடந்த 9 ஆம திகதி இவ் ...ணுக்குண்டுச் சோதனை நடத்தப்பட்டதாக ... பேரொலியுடன் இக்குண்டு வெடிததில் ...ில் 4 கிலோமீற்றர் சுற்றளவில் பெரும் ...கமண்டலம் எழுந்ததாகவும் தென்கொரி... செய்திகள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து அயல் நாடுகளான சீனா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் தமது இராணுவ புலனாய்வு மற்றும் செய்மதிகளூடான அவதானிப்புகககளை வடகொரியா மீது மேறகொள்ளத் தொடங்கியுள்ளன.

இதேவேளை கடந்த 9ஆம் திகதி வடகொரியாவின் தேசிய தினம் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## கனடாவில் காந்திசிலை

(கனடா)

கனடாவில் அமைக்கப்பட்டுவரும் மனித உரிமைகளுக்கான அருங்காட்சியகத்தில் மகாத்மா காந்தியின் சிலை திறக்கப்படவுள்ளது.

கனடா நாட்டின் மத்திய பகுதியில் உளள வின்னிபெக் நகரத்தில அமைக்கப்பட்டு வரும் மனித உரிமைகளுக்கான அருங்காட்சியம் அடுத்த நான்கு ஆண்டுகளில் திறக்கப்பட இருக்கிறது. அதில் வைப்பதற்காக 500 கிலோகிராம் எடையுள்ள மகாத்மாகாந்தி முழு உருவச் சிலை இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெண்கலச் சிலையை சிற்பராம் வஞ்சிசுடர் வடிவமைத்து இருக்கிறார். தடியூன்றி மகாத்மா காந்தி நடந்து செல்லும் கோற்றக்கில் அமைக்கப்பட்ட இச்சிலையின் பீடத்தில் அவரது பெயர், பொன்மொழிகள் இடம்பெற்று இருக்கின்றன.

கடந்த நூற்றாண்டில் மனித உரிமைக்காக போராடிய உலக தலைவாகளில் மகாத்மா காந்தி முதன்மையானவர் எனக் கருதப்பட்டார்.

கனடா தூதரக தகவல் தொடர்பாளர் பிரதாப்சிங் கூறுகையில், மகாத்மாவின் போதனையான உண்மை, நேர்மை, அகிம்சை ஆகிய கொள்கைகளுக்கும் இந்திய பண்பாட்டிற்கும் செலுத்தப்படும் காணிக்கை. அவர் கொள்கைப்படி வாழ்ந்து காட்டிய தலைவர், பல மொழி இன மக்கள் வசிக்கும் கனடாவில் மனித உரிமை அருங்காட்சியகத்தில் அவரது சிலை வைக்கப்படுவது மிகவும் பெருமைக்கு உரியது என்றார். (ப)

6th months

யாழ்ப்பாணத்தில்

M.M.I.C

20% கழிவு

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை சார்

தபால் மூலம் கற்கை நெறி

*Diploma in massmedia*

Dip. in. m. m. (srilanka) சான்றிதழ்

இல.15, சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.

(C/443) Call:- 0777 316258

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்திக்க புஷ் மறுப்பு தெரிவித்தாராம்

(கொழும்பு)

அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அந்நாட்டின ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷை சந்திப்பதற்கு மேற்கொண்ட முயற்சி கைகூட வில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட கூட்டத் தொடர் ஒன்றில் கலந்து கொள்வதற்காக அடுத்த வாரம் அமெரிக்கா செல்லவுள்ள ஜனாதிபதி இவ் விஜயத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ்ஷை சந்திக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் இந்தப் பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர், அமெரிக்க ஜனாதிபதியுடனான சந்திப்பிற்கும் ஏற்பாடு செய்ய முயற்சித்த போதும் ஜோர்ஜ் புஷ் இதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## முதியோர் தினத்தை முன்னிட்டு பல்வேறு செயற்றிட்டங்கள்

(சுதுமலை)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு பல்வேறு செயற்றிட்டங்களை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளுமாறு வடக்கு- கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் சகல பிரதேசசபைகள், நகரசபைகள் பிரதேச செயலர்களிற்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சமூகத்தில் முதியோரை கனம் பண்ணுதலின் முக்கியத்துவம் தொடர்பான குறிக்கோளை முன்னெடுத்து இவ்வருடம் சர்வதேச முதியோர் தினத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் இளஞ்சந்ததியினரிடம் முதியோரை மதித்தல், முதியோரை கனம் பண்ணுதல் போன்ற விடயங்களில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் போட்டிகள் நடாத்தப்பட்டு அவர்களிற்கு பரிசில்கள் வழங்கியது போன்ற நிகழ்வுகளை அவ்வப் பகுதி வலயக்கல்விப் பணிப்பாளரது ஆலோசனையுடன் செயற்படுத்த வேண்டும்.

முதியோர்களை சமூகத்தில் ஒருவராக கனம் பண்ணி அன்பு காட்டி அவரது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உரிய மனப்பாங்குகளை வளர்க்கும் நோக்குடன் கவிதை, கட்டுரை,பேச்சு, பாட்டுப் போட்டிகள் பாடசாலை ரீதியாக நடாத்துவது பற்றியும் அச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இத்தினத்தில் முதியோரை அழைத்து அவர்களை கௌரவித்து அவர்களுக்கு போட்டிகள் வைத்து பரிசில்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-252)

க.பொ.த. (சா.த) மாணவர்களே! வலம்புரியில் தொடர்ந்து பயிற்சி வினாத்தாள்கள் வெளிவருகின்றன.

விவாத அரங்கு -5

விடயம்

வீடியோப் படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றது. பாதுகாக்கின்றது.

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன் (பிரபல சட்டத்தரணி)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள

அனுப்பவேண்டிய முகவரி

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# செய்தித் துளிகள்

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

ஜே/66 ஈச்சமோட்டை, ஜே/ 75 சுண்டுககுளி தெற்கு, சுண்டுக்குளி வடக்கு, மருதடி ஆகிய கிராம சேவையாளா பிரிவு மக்களுக்கு பிறப்பு சான்றிதழ், தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகளுக்கான நடமாடும் சேவையொன்று எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் வசமுள்ள ஆவணங்களுடன் சமுகமளித்து இச்செயன் முறையின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் கேட்டுக் கொளகின்றார். ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றை பெற்றுக் கொடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளன. எனவே பங்கீட்டட்டை, குடும்பஅட்டைகளைக் கொண்டு வருமாறும் கோரப்பட்டுள்ளது. (ப)

## உலகவங்கியின் உதவியுடன் வீடுகள் அமைப்பு

(மருதங்கேணி)

வடமராடசி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஆழியாவளையில உலகவங்கி உதவியுடன் 25வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை இவ்வீடுகள் அமைக்கும பணிகள் யாவும் இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன் முடிவடைய வேண்டுமென மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பயனாளிகளைக் கேட்டுள்ளார். (க-35)

## வாய்க்கால் புனரமைப்பு

(சுதுமலை)

வலி-தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள நவாலி- சங்கையான் வெள்ளை வாய்க்கால் ஒன்றை துப்பரவு செய்வதற்கு மனிப்பாய் பிரதேசசபை நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது.

மேற்படி வாய்க்கால் பல வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளதால் மழை காலத்தில் நீா ஓடுவதற்கு வழியில்லாமல் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் மழைககாலத்திற்கு முன்பாக விரைவாக செப்பனிடுவதன் மூலம் வெள்ள நீர் ஓடுவதற்கு வழி செய்யுமாறு நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் பிரதேச சபைக்கு முறைப்பாடு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-252)

## விவசாய வங்கி விரைவில் திறப்பு

(இணுவில்)

உடுவில் கம நல சேவைகள் நிலைய விவசாயிகளுக்கான வங்கி இம்மாத இறுதிக்குள் கமநல சேவை நிலையத்தில் ஆரம்பிக்கபபடவுள்ளதாகவும் இதன்மூலம் இலகுவான முறையில் விவசாயிகள் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியு மென்றும் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் சு. சோதிநாதன தெரிவித்துள்ளார். (க-22)

## பஸ்தரிப்பிடம் இன்றி மக்கள் அவதி

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எந்தவொரு சந்தியிலும் பஸ்தரிப்பிடம் இல்லாததனால் மக்கள் மர நிழலிலும் வெய்யிலிலும் பஸ்ஸிற்காக காத்து நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக மருதங்கேணி தாளையடிச்சந்தி, ஆஸ்பந்திரிச் சந்தி போன்ற இடங்களில் தரிப்பிடம் இல்லாததால் பஸ்ஸிற்காக காத்து நிற்பவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகின்றார்கள்.

இவை தவிர மருதங்கேணியிலிருந்து ஆழியாவளை வெற்றிலைக்கேணி செல்லும் இடங்களிலும் பஸ்தரிப்பு இடங்கள் இல்லாமல் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-35)

## செயலமர்வும் கண்காட்சியும்

(மருதங்கேணி)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் பெற்றோர் விழிப்புணர்வுச் செயலமர்வும் கண்காடசியும் வடமராட்சி கிழக்கு குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

வடமராட்சி கல்வி வலயத்தைச சேர்ந்த 125ஆசிரியர்களின் உதவியுடன் மருதங்கேணி கோட்டத்திலுள்ள ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் பெற்றோர்களும் இச் செயலமர்விலும் கண்காட்சியிலும் கலந்துகொண்டனர். (ந-35)

## திறப்பு விழா

(பொன்னாலை)

சங்கானை பனை- தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவுக் கிராமிய வங்கித் திறப்பு விழா நாளை புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு தலைமைக் காரியாலயத்துடன் இணைந்த கட்டடத்தில் நடைபெறவுள்ளது

சங்கத் தலைவர் வ.முத்துராசா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பனை- தென்னை வள அபிவித்திச் சங்க கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி. ஐயாத்துரை, பனை -தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு. கணேசமூர்த்தி, வலி.மேற்கு பிரதேச செயலா் சி.ஏ.மோகன்றாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க,49)

## நியமனம்

(மருதங்கேணி)

மருதங்கேணி கோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு கல்வியியற் கல்லூரியில் பயின்று வெளியேறிய ஆசிரியர்கள் 12 பேர் நியமனம் பெற்றுள்ளார்கள்.

இவர்கள் கடந்த முதலாம் திகதி தமத கடமைகளைப் பொறுப்பேற்றனர். அதை விட ஆசிரியர் பயிற் சிக் கால கல்லூரியிலிருந்து பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியவர்களில் ஏற்கனவே 13 பேர் மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

மொத்தமாக மருதங்கேணி கோட்டத்திறகு 25 ஆசிரியர்கள் நியமிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-35)

## அதிசய பனை முறிந்து வீழ்ந்தது

(பொலிகண்டி)

பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆலயதததின் மேற்குப் பகுதியில் உள்ள பல கிளைகளைக் கொண்ட பனைமரம் கடந்த சனியன்று முறிந்து வீழ்ந்தது.

இதனைப் பார்வையிட்ட பக்தர்கள் கவலையும் அதிர்ச்சியும் அடைந்தனர். (க-106)

## பயிற்சிக் கருத்தரங்கு

(பொன்னாலை)

தெல்லிப்பழை,சங்கானை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலுள்ள தாய்- சேய் நலனை மேம்படுத்தும் நோக்கில் நூறு தாய்மார்களுக்கு குடும்பத்திட்டம், போசாக்கு, பொதுச்சுகாதாரம் தொடர்பான விசேட பயிற்சிக் கருத்தரங்கு நாளை புதன்கிழமை முதல் எதிர் வரும் 18 ஆம் திகதி வரை சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போரூட் நிறுவனத்தின் அனுசரணையோடு நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் பங்குபற்றும் சகல தாய்மார்களுக்கும் பயிற்சிக்கருத்தரங்கின் முடிவில் விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி இரண்டு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் தலா மூன்று தாய்மாா்களைத் தெரிவு செய்து மேற்கொளளப்படவிருககும். இப்பயிற்சிக் கருத் தரங்கானது நான்கு நாட்களுக்கு நான்கு அமர்வுகளாக நடைபெறவுள்ளமை குறிபபிடக்கக்ககாகும் (க-49)

## 'பனைச்செல்வம்' வெளியீட்டு விழா

(பருத்தித்துறை)

யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாசும் தால மூலவள நிறுவன இயக்குநர் வி.ஜீ.தங்கவேலும் இணைந்து எழுதிய "பனைச் செல்வம்" நூல் வெளியீட்டு விழா யாழ்.பல்கலைக்கழக கைலாசபதியரங்கில் எதிர்வரும் 18ஆம் திகதி பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நூல் அறிமுகவுரையை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இளம்பரிதியும் நூல் வெளியீட்டுரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக பொறுப்பாளர் எஸ்.கரிகாலனும் நிகழ்த்துவர் .

நூலின் முதற் பிரதியை வட மாகாண பனை -தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் கே. தவராஜா பெற்றுக்கொள்வார்.

நூல் மதிப்பீட்டுரையை விவசாய பீட பயிரியல் துறைத் தலைவர் கலாநிதி திருமதி சிவமணி சிவச்சந்திரன் நிகழ்த்துவார். (ந-52)

## கரபந்தாட்ட இறுதிப் போட்டி முடிவுகள்

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளி சனசமூக நிலையம் அதன் 76 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை சுண்டுக்குளி கிராம மட்டத்தில் நடாத்தியது.

இப்போட்டித் தொடரில், ஓர் அங்கமாக நடை பெற்று வந்த ஓவர் கேம் முறையிலான கரபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் ,கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சனசமூக நிலையத்தலைவா் ஜே.றொனிக்கல் தலைமையில் நடைபெற்றது.

இறுதி ஆட்டத்தில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்தாடிய, சுண்டுக்குளி விளையாட்டுக் கழக அணியை 2.1 செற் கணக்கில் 09.15,15.11, 15.7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் பட்டத்தை தனதாகிக் கொண்டது. (ந-110)

## நிர்வாகிகள் தெரிவு

(புத்தளம்)

புத்தளம் மாவட்ட தமிழ் முஸ்லிம் சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் புத்தள ம் இஸ்லாமிய முன்னணி மண் டபத்தில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டவா்களின் தலைவராக ஏ.எஸ். புல்கியும் உப தலைவராக சுபியானி பாரூக்கும், செயலாளராக எஸ்.ஆர்.எம் இந்ஷாத்தும் உப செயலாளராக எம். யூ.எம். சனூனும் பொருளாளராக டி.சசிகலாவும் செயற்குழு உறுப்பினா்களும் தெரிவு செய்யப்பட்டனர். (க-15)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி ஆலய சங்காபிஷேகப் பெருவிழா நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி 11.30 மணிக்கு சங்காபிஷேகமும் விசேட பூசைகளும் நடைபெறவுள்ளது.


அன்றைய தினம் நண்பகல் 12.30 மணிக்கு முருகப் பெருமானின் மகா கும்பாபிஷேக சிறப்புமலர் வெளியட்டு நிகழ்வும் இடம் பெறவுள் ளது. (க)

## பாவனைக்கு உதவாத அரிசி அழிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனைப் பகுதியில் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்துக்காக களஞ்சியப் படுத்தப்பட்ட பாவனைக்குதவாத 130கிலோ அரிசி-அம்பன் பகுதி பொதுச சுகாதாரப் பரிசோதகர் இரா.ஈஸ்வரனால் கைப்பற்றபபட்டு மக்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டது. (க)

# நல்லூர்க் கந்தன் ஆலய ...










படங்கள்: ஐங்கரன், சிவசங்கர்


















## இன்று ஒரு தகவல்

# ஞானிகள்

ஒருவர் தனியாக ஒரு இடத்தில் கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். அவர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா? தியானம் செய்து கொண்டிருக் கிறாரா என்று எப்படிக் கண்டுபிடிப்பது? நமக்குத் தெரிந்தவரைக்கும் தூக்கம் என்றால் தலை அடிக்கடி சாயும். அதன் பின்பு நிமிரும். தியானம் என்றால் ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கும்.

தூக்கத்திற்கும் தியானத்திற்கும் நிறைய வித்தி யாசம் உண்டு. ஒரு முட்டாள் தூங்கப்போனால் முட்டா ளாகவே திரும்பி வருகின்றான். அதே முட்டாள் தியா னம் செய்யப் போனால் அவன் ஞானியாகத் திரும்பி வருகின்றான் எனப் பெரியவர்கள் கூறுகின்றனர்.

அது இருக்கட்டும்... ஞானிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? இப்போது நாம் ஒரு அழகான ரோஜாப் பூவைப் பார்க்கின்றோம்."ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது"என்று நினைக்கிறோம். ஒரு ஞானி அதே ரோஜாப்பூவைப் பார்க்கிறார். "ஆகா இது எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று நினைக்கிறார் அவரும்.

உலகப் பொருட்களை நாம் எப்படி ஐம்புலன்களின் மூலமாக உணர்கிறோமே அப்படித்தான் அவர்களும உணர்கின்றனர். அதில் ஒன்றுமில்லை அல்வா சாப்பிடுகிறோம்... அது நமக்கு மட்டும் தான் இனிக்கும. ஞானிகளுக்கெல்லாம் கசக்கும் என்றா சொல்வோம்? அப்படி இல்லை. அதில் வித்தியாசம் இல்லை.

அப்படியென்றால் ஞானிகளுக்கும் நமக்கும் என்ன தான் வித்தியாசம்? அந்த வேறுபாடு எந்தக் கட்டத்தில் ஆரம்பமாகின்றது அதை இப்போது பார்ப்போம். இப்போது மறுபடியும் அந்த ரோஜாப்பூவிடம் செல்வோம். ஞானி அதைப் பார்க்கிறார்'ஆகா எவ்வளவு அழகாக இருக் கிறது' என்று நினைக்கிறார்.அதன் பின்பு அதை நினைப பதில்லை. வேறு வேலையைப் பார்க்கப் போய் விடுவார். அல்லது இயற்கையின் ஆற்றலைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார். அவ்வளவு தான்.

ஆனால் நாம் அப்படிச் செய்யமாட்டோம் .நாம் என்ன செய்வோம் தெரியுமா? முதலில் அந்த ரோஜாப் பூவைப் பார்ப்போம். 'ஆகா எவ்வளவு அழகாக இருக்கிறது' என்று நினைப்போம். அந்த அழகை ரசிப்போம். அதன்பின் இந்த மலர் நம்மிடமிருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று நினைப்போம் அதன்பின் அந்த மலர் நமக்கு வேண்டும என்று நினைப்போம்.

அதற்கு அடுத்த கட்டமாக அந்த மலர் இல்லா விட்டால நம்மால் வாழமுடியாது என்ற நிலைக்கு வந்து விடுவோம். உடனே அந்த மலரை அடைவதற்கு முயற்சி செய்வோம். அதற்கு யாராவது தடையாக இருந்தால் அவர்கள மீது நமக்குக் கோபம் வரும்.அந்தக் கோபத்தின காரணமாக நமது விவேக புத்தியை இழப்போம். யாருடன் எப்படி நடந்துகொள்வது என்ற பண்பை மறந்து விடுவோம்.

அதன் காரணமாக ஞாபகமறதி ஏற்படும். அதாவது முன்பு விவேகபுத்தி மழுங்கியிருந்தது என்றால் அது இப்போது அடியோடு இல்லை என்ற நிலை ஏற்பட்டு வடும் அதன் காரணமாக நமது புத்தியை இழந்து கடைசியில் அழிவோம். இந்த நிலமை நமக்கு வந்து விடக் கூடாது என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?

நமக்கு கெடுதல் செய்யக்கூடிய ஆசைகளை ஆரம்பத்திலேயே கிள்ளியெறிந்து விடவேண்டும். ஒரு விஷயம் தெரியுமா? எந்த ஆசைக்கும் முதலில் வலு இல்லை அதைப்பற்றி நாம் நினைக்க நினைக்கத்தான் அதற்கு வலு உண்டாகிறது. இளம் தளிராக இருந்தது இப்போது பெரிய மரமாக ஆகிவிடுகிறது. ஞானிகள் இந்தளவுக்கு அதை வளரவிடுவதில்லை. அதுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

ஒரு இளைஞன் கையில் ஒரு குச்சியை வைத்துக் கொண்டு நடந்து போய்க்கொண்டிருக்கிறான். இன்னொரு வயதானவர் கையில் ஒரு குச்சியை வைத்துக கொண்டு நடந்துபோகிறார். அது அவருக்கு ஊன்றுகோல. அது இல்லாவிட்டால் அவரால் நடக்க முடியாது. அது தவறிவிழுந்தால் அவரும் கீழே விழுந்து விடுவார். ஆனால அந்த இளைஞன் அப்படி இல்லை. அவனுடைய கைத்தடியை யாராவது எடுத்துக் கொண்டுபோனால் கூட அவன் கவலைப்படமாட்டான். அவன் அந்த கைத்தடியைப் பயனபடுததுவது போல் தான் ஞானிகள் பொருள்களைப் பயன்படுத்துவார்கள். ஆனால் நம்மைப்போல் நபர்கள் அந்த வயதானவர் கைத்தடியைப் பயன்படுத்துவது போல உலகப் பொருட்களைப் பயன்படுத்துகிறோம். இதுதான் ஞானிகளுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம்.

ஞானி என்பவர் பொருள்களைத் துறக்கமாட்டார். அவற்றின் மீதுள்ள பற்றுதலைத்தான் துறப்பார். எனக்குத் தெரிந்த ஞானி ஒருவர் இருந்தார். அவர் சொன்னார் "1988ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதியை என்னால மறக்க முடியாது" என்றார். 'ஏன்?' என்று கேட்டேன். "அதுதான் எனக்கு ஞானம் வந்த வந்த நாள்" என்றார். "அப்படியா?" என்றேன். "ஆமாம் அன்று தான எனக்குக் கல்யாணம் ஆனது .என் மனைவியின் பெயா ஞானம்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜனாதிபதியின் ஆலோசனை சபைத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிப பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் , மக்கள் அமைப்புக் களின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்த ஜனாதிப தியால் முன்மொழியப்பட்டுள்ள சமாதானத்துக்கும நல் லெண்ணத்துக்குமான தேசிய ஆலோசனை சபைத் திட்டத் தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடியோடு நிராகரித் துள்ளது.

ஜனாதிபதியின் இந்தத் திட்டத்துக்கு எதிர்க்கட்சி களும் ஆதரவு வழங்கக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவா ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த வியாழனன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்கவை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமா ரதுங்க சந்தித்தார்.

இச் சந்திப்பின் போது, ஜனாதிபதி மேற்படி தனது திட் டத்தை எதிர்க்கட்சித் தலைவரிடம் எடுத்துக் கூறியிருந்தா எனவும் அப்போதே ஜனாதிபதியிடம், இந்தத் திட்டத்தால் பயன் எதுவும் இல்லை என்றும் தேவையில்லாமல் சபைகளை அமைத்துக் காலத்தை இழுத்தடிக்காமல் புலிகளின் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதே சிறந்தவழி என்றும் ரணில் கூறினார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரி வித்தன.

இதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப் பாடு தொடர்பாக ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கம் கடந்த ஜூலை மாதம் புலிகளிடம் தமது தீர்வு வரைவொன்றைச் சமர்ப்பித்துள்ளது. அதற்குப் புலிகள் தமது பதில் வரைவை முன்வைத்துள்ளார்கள்.

இனிமேல், அதற்கு மீண்டும் பதில் வரைவு சமர்ப்பிப்பது என்றும் விதம் விதமான ஆலோசனை சபைகள் என்றும் காலத்தை இழுத்தடிக்கக்கூடாது.

கடந்த 50 வருடங்களாக ஆட்சியிலிருந்த அரசுகள் அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்திக் கொண்டு தான் இருக்கின்றன. இனியும் ஆலோசனை ,கலந்துரையாடல் என்று குழு அமைத்துக் கூடிப்பேசிக் கொண்டிருப்பது, அன் றாடம யுத்த பீதியிலிருக்கும் மக்களின் வாழக்கைப் போராட் டத்தை மீண்டும் இழுத்தடிப்பதாகவே முடியும்.

எனவே ஜனாதிபதியின் இந்தப் புதிய திட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஆதரவு வழங் காது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நாடாளு மன்றத்தைக் கலைத்ததன் மூலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொண்டு வந்த சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி முட்டுக்கட்டை போட்டு தீர்வுக்கான காலத்தை இழுத்தடித் தார்.

தற்போது,மேலும் காலத்தை இழுத்தடிக்கும் முயற் சிகளில் இறங்கியிருக்கிறார். அவர் அரசியல் சுயலாப நோக்குடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நாட்டின் தேசிய பிரச்சினைக்கான தீர்வைப் பின்தள்ளிக் கொண்டே போகின் றன.

இதனால் இனியும் தமிழினம் சிங்கள தேசத்தின் இத் தகைய அரசியல் குத்துக்கரணங்களுக்கு தாளம் போட் டுக் கொண்டிராது என்றார். (க)

# பேசாலையில் காணாமல் போன மீனவர்களை தேடும் பணி மும்முரம்

(மன்னார்)

மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் கடந்த வியாழக் கிழமை தீப்பிடித்து எரிந்து கடலில் மூழ்கிய இந்திய ட்றோ லர்களிலிருந்த மீனவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந் தும் இடம்பெற்று வருகின்றது.

பேசாலைக் காட்டுப்பகுதியில் இவர்கள் இருக்கக் கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் அங்கு தேடுதல் நடத்தப்பட்ட தாகவும் ஆட்கள் நடமாடியதற்கான தடயங்கள் இருந்த போதிலும் எவரும் கண்டுபிடிக்கப்படவில்லையென்று தலை மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரம் இச் சம்பவத்தையடுத்து கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, காணாமல்போன எட்டு மீனவர்களும் இதுவரை கரை சேரவில்லையென தமிழ்நாடு மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் தமக்கு அறிவித்திருப்பதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-8)

## இராசி பலன்

**14.09.2004**

**(ஆவணி 29 செவ்வாய்க்கிழமை)**

**அமாவாசை முன்னிரவு 8.47 வரை**

**பூரம் முன்னிரவு 6.42 வரை**

**இராகு காலம் 3 .03-4.33 வரை**

**சுப நேரம் 10.33-12.03 வரை**

**அமாவாசை விரதம்**

**மேடம்**
தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம், ரோக நிலை, பணத்தட்டுப்பாடு.

**இடபம்**
உடல் நலக் குறைவு, தாய வழி உறவு, வேலையில் ஆர்வம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**
குடும்ப சுகம், பிரயாண நன்மை, கீர்த்தி, காரிய அனுகூலம்.

**கடகம்**
மாதர் நட்பு. உணர்ச்சி வசப்படுதல், பணவிரயம், கௌரவக் குறைவு.

**சிங்கம்**
தேக நலன், கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, தெய்வ சிந்தை.

**கன்னி**
பரயாணம், சயன சுகக்குறைவு, சுர வியாதி, நண்பர்கள் விரோதம்.

**துலாம்**
இஷ்ட சித்தி, நல்ல மனைவாசம், பெருமையடைதல், பொருள் சேர்க்கை.

**விருச்சிகம்**
நிலை மாற்றம், தொழிலில் ஆர்வம், அதிகாரம், நண்பர்கள் சந்திப்பு.

**தனுசு**
பித்தரோகம், சரீரப் பிரயாசை, புதிய திட்டமிடல். தந்தை வழி உறவு.

**மகரம்**
வீண் தொல்லை, காரிய தடங்கல், பணத்தட்டுப்பாடு, வாகன பயம்.

**கும்பம்**
தெய்வசிந்தை, காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, உற்சாகம் .

**மீனம்**
தடைப்பட்ட காரியம் கை கூடும், உறவினர்வருகை, ஆரோக்கியம், பண வருவாய்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வலவன்

# மணல் அகழ்வைத் தடுப்பது குறித்து விரிவாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

அரியாலை,முள்ளி பிரதேசங்களில் மணல் களவாக அள்ளப்படுவதாக யாழ். மேலதிக நீதிவான் திருமதி சிறிநிதி நந்தசேகரனுக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அப்பகுதிக் கிராமசேவகர்ளையும், 514,512 படை உயர் அதிகரிகளையும் அழைத்து கடந்த வியாழக்கிழமை மாவட்ட நீதிமன்றில் இது குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

முள்ளி என்றும் இடத்தில் மணல் அதிகமாக அகழப் படுவதாகவும், இதனால் இப்பிரதேசத்தில் புதிதாக இராணுவ வத்தினரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு புரிந்துணர்வு ஒப்பந்தப்படி புதிய காவலரண் அமைப்பதோ, இராணு வமுகாம் அமைப்பதோ முடியாத விடயம் என இராணுவத் தினாரல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து பொலிஸார் இதுவரை இங்கு காவல் கடமையில் அமர்த்துவதுடன் அவர்களுக்கு இராணுவம் பாதுகாப்பு வழங்கலாம் என்றும் 512,514 படையணி உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கு யாழ். பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக நீதிவான் தெரிவித்தார். (ற-5)

# இலங்கை கடற்படைக்கு உதவுவது குறித்து ஆராயவுள்ளேன்

## இந்திய கடற்படைத்தளபதி அருண் பிரகாஷ்

(கொழும்பு)

இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கை வந்து சேர்ந்துள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்த இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல்அருண்பிரகாஷை விமான நிலையததில் வைத்து இலங்கைக் கூட்டுப்படைத் தலைமை அதிகாரி வைஸ்அட்மிரல் தயாசந்தகிரி வரவேற்றார்.

இந்தியக்கடற்படைத்தளபதியாக நியமனம் பெற்ற பின் முதற்தடவையாக இலங்கை வந்துள்ள அட்மிரல் அருண் பிரகாஷ் இலங்கைக் கடற்படைக்கு எவ்வாறு உதவிக ளைச் செய்யலாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுடனும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் இராணுவ அதிகாரிகள், கடற்படை அதிகாரிகளையும் அரச அதி காரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடப் போவதாகத் தெரிவித்துள்ளார். (ம)

# பித்தப்பையும் அதில் உண்டாகும் கற்களும்

கல்லீரலில் உற்பத்தியாகி பித்தப்பையில் வந்து சேகரமாகும் பித்தநீர், ஜீரணம் நடைபெறும் போது வெளியேறி முன்சிறுகுடலில் கலக்கி



றது. இந்தப் பித்தநீர் உணவலுள்ள கொழுபபுப் பொருள்களைச் செரிக்க மிகவும் பயன்படுதிறது. கல்லீரலிலிருந்து பித்தநீரைக் கொண்டு வரும் பித்தநாளம் குறுக்காக ஒரு சிறுபை அமைப்பில் போய் முடிகிறது. இந்தப்பை அமைப்பே பித்தப்பை. இந்தப் பித்தப்பையில் கால பைண்ட் அளவு பித்தநீர் சேமித்து வைக்கப்பட முடியும்.

பித்தப்பையில் பித்தநீரிலுள்ள நீர்மம் வெகுவாக உட்கவரப்பட்டு விடுவதால் பித்தநீர் கிட்டத்தட்ட பத்து மடங்கு செறிவடைகிறது இவ்வாறு

## மருத்துவ விளக்கம்

பித்தநீர் ஏன் சேமிக்கப்படவேண்டும் என்பது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது. அறுவை மூலம் பித்தப்பை அகற்றப்பட்டால், அது இல்லாமலேயே கூட நல்லபடி உயிர்வாழ முடியும்.

இரபபையிலிருந்து கொழுபபு உணவுகள் குடலை அடையும் சமயங்களில் பித்தநீர் பித்தப்பையை விடடு வெளியேறுகின்றது. பித்த நீர் கொழுபபுப் பொருளை உடைக்கவும் இளக்கவும் கூடியதிறன் பெற்றது.

***கற்கள் உருவாதல்***

பிததப்பையில் பித்தநீர் வந்து சேர்ந்து செறிவடையும் நிலையில் பித்தக்கற்கள் தோன்றக்கூடிய பொதுவான சாத்தியக் கூறுகள் அநேகம். ஆனால் இப்படிப்பட்ட பித்தக்கற்கள எவ்வாறு உண்டாகின்றன என்பது குறித்து மருத்துவ அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. பித்தக்கற்கள் சிறுமணல அளவிலிருந்து ஒரு புறா முட்டையளவு பல்வேறு வகைப்பட்ட கற்களாக உருவாவதுண்டு.

சுமார் 50 வயதிற்கு மேற்பட்டவர்களில் பத்தில் ஒருவருக்குப் பித்தப்பையில் கல்லோ அல்லது கற்களோ தோன்றி தொல்லை தரக்கூடும்.

***கற்களின் வகைகள***

மூன்று வெவ்வேறு வகைப்பட்ட பித்தக் கற்கள் பித்தப்பையில் தோன்றுகின்றன. இவற்றில் மிகச் சாதாரணமானவை கலப்புக் கற்கள் எனப்படுகின்றன. ஏனெனில், பித்தநீரின் அழுத்தமான பசுமை நிறமும, கொழுபபுப்பொருள்களை உடைப்பதனால் உருவாகும் கொலஸ்ரோல என்சைம் வேதிப் பொருளும் கலந்து உருவாகும் கற்கள் இவை. ஒரே சமயத்தில் சுமார் 12 கற்கள் கூட ஒன்றாக உருவாவதுண்டு. இவை பித்தப்பையின் வடிவில் சரியாகப் பொருந்தும் வகையில் உருவாகிவிடுகின்றன.

கொலஸ்ரோல் கற்கள் பெருமளவில கொலஸ்ரோல் வேதிப் பொருளிலிருந்தே உருவாகின்றன. இவை 1.25 செ.மீ(அரை அங்குலம்) அளவு குறுக்களவுடையவையாய் வளர்ச்சியடைவதுண்டு. இந்த அரையங்குலக் குறுககளவுள்ள கல் பித்த நாளத்தை அடைக்கப் போதுமானது.

பச்சைநிறப் பித்தக்கற்கள் பெருமளவு பித்தநீர் சேகரத்தால் உருவாகின்றன. இவை எண்ணிக்கையிலும் அதிக அளவில் உருவாகின்றன. இவை அளவில் சிறியவையாக இருப்பது வழக்கம. நோய்வாய்ப்பட்டதன் விளைவாக இவ்வகைப் பித்தக்கற்கள் உருவாக வழியுண்டாகிறது.

***பித்தப்பைப் பிரச்சினைகள்***

பிததப்பையில் உண்டாகும் பெரிய பிரச்சினை - அது அழற்சியடைதலாகும். இவ்வழற்சி ஒரு வித பக்டீரியாவால் உண்டாகிது. இது ஏற்கனவே பித்தப்பையில் பித்தக்கற்கள் உருவாகியதாலும் வரக்கூடும். இதன் அறிகுறிகள் நபருக்கு நபர் மாறுபடும் என்றாலும் வலியும் வாந்தியும் உண்டாவது வழக்கம்.

கடுமையான பித்தப்பை அழற்சியின காரணமாக வயிற்றின் வலப்புறத்தில் மேல் பகுதியில் கடுமையான வேதனையுடன் கூடிய வலி திடீரென்று உண்டாகும். இதனைத் தொடர்ந்து காய்ச்சலும் வாந்தியும் இருக்கும். நாள்பட்ட பித்தப்பை அழற்சி என்பது நீண்ட நாட்களாகக் காணப்படும் அழற்சியாகும். இதன் காரணமாக வலி குமட்டல், வயிற்றுப் பொருமல போன்றவை இருக்கும்.

***பித்தப்பைக் கோளாறினால் உண்டாகும் கடுமையான வயிற்றுவலி***

எப்போதேனும் சில சமயம் ஒரு பெரிய பித்தக் கல் பித்தப்பையை விட்டு வெளியேறிச் சென்று பித்த நாளத்தில் அடைத்துக்கொள்வதுண்டு. இதன் விளைவாக, அடி வயிற்றுப்பகுதியில் வயிற்றுவலி உண்டாகும் காய்ச்சல் வேகம் மிகுதியாக இருக்கும் அதிகமாக வியர்த்துக் கொட்டும்.

இந்தக் கல்லடைப்பினால் பித்த நீர் குடலுக்குச் செல்வதும் தடுக்கப்படுகிறது. எனவே, உண்ட உணவின் கழிவுகள் வெளுத்த நிறத்தில் மாறுகின்றன. இப்படி பித்தநீர் தடைசெயயப்படுவதால் அதில் உள்ள நிறமி நேரடியாக இரத்த வோட்டத்தில் கலக்கிறது. இதனால் நோயாளியின உடல் நிறம மஞ்சளாக மாறுகிறது. வேறு விதத்தில் சொல்வதென்றால், நோயாளிக்கு மஞ்சள் காமாலை என்று பொருள். அதேசமயம், உடலானது இந்த அளவுக்குமீறிய நிறமியை சிறுநீரின் மூலம் வெளியேற்ற முற்படுகிறது. இதனால் சிறுநீர் ஆழ்ந்த பழுப்பு நிறத்தில் அல்லது ஆரஞ்சு நிறத்தில் மாறுகிறது. இதை சரியானபடி கவனித்து அகற்றாவிட்டால் இந்த அடைப்பு கல்லீரலுக்கு கடுமையான சேதத்தை விளைவித்து இறுதியில் ஈரலரிப்பு நோயில் கொண்டுபோய் விட்டுவிடும்.

***பித்தக் கற்களைக் கண்டறிதல***

பித்தப்பை அழற்சி, பித்தப் பைக கோளாறால் வயிற்றுவலி அல்லது மஞ்சள் காமாலையினால் துன்புறுகிற எவரும், அதன் மூலகாரணத்தைக் கண்டறிய பித்தப் பையல்கற்கள்உள்ளனவா என்று சோதித்து அறியவேண்டும்.

இதற்கு பல்வேறு வகைப்பட்ட வழிமுறைகள் உள்ளன. எல்லா வகையான பித்தக் கற்களும் எக்ஸ்ரே படத்தில் தெரிந்துவிடுவதில்லை. எனவே, தெளிவாக எதையும் அறிய ஒரு வகைச்சாயப் பொருளைப் பித்தப் பையிலோ அல்லது அதைச் சுற்றிய பகுதிகளிலோ செலுத்தி எக்ஸ்ரே மூலம் கண்டறியலாம். **Fibre - optic tube** மற்றும் கேளா ஒலியலை ஆகியவற்றைப் பயன்படுத்தியும் உள்ள நிலையை அறியலாம்.

***சிகிச்சை***

பித்தக் கற்கள் சிக்கல்கள் எதையும் உண்டாக்கவில்லையெனில் அவற்றை அப்படியே விட்டுவிடலாமா அல்லது அவற்றை அகற்றவேண்டுமா? என்பது பற்றி மருத்துவ அறிஞர்களிடையே கருத்து மாறுபாடுகள் உண்டு. பித்தக்கல் அல்லது கற்கள் உண்மையிலேயே தொல்லைதர ஆரம்பிக்கும்வரை பொறுத்திருக்கவேண்டும் என்று சிலர் குறிப்பிடுகின்றனர்.

பித்தப்பை அழற்சி முதன் முறையாக உண்டாகும் போது அதை மருந்துகளைக் கொடுத்து சரி செய்து விடலாம். அதேபோல, சில மாதங்கள தொடர்ந்து மருந்துகளை எடுத்து பித்தக் கற்களைக் கரைத்துவிடுவதும் சாத்தியமே.

பித்தக் கற்களைக் கண்டறிந்து அகற்றுவதுதான் பித்த நாளத்திலுள்ள கல்லடைப்பை நீக்குவதற்கான ஒரே வழி. எனவே பித்த நாளத்தில் கல் அடைப்பு ஏற்பட்டால் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய தேவை இல்லை. □

**டாக்டர் சு.நரேந்திரன**

## சிறுவிளம்பரம்

**O/L English**

மார்கழி 2004 பரீட்சைக்கான வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி காலை 6.30 -7.30 திங்கள், வெள்ளி மாலை 7.30- 8.30 கடந்த காலப்பரீட்சை வினாக்களும் மாதிரி வினாக்களும் விசேடமாக செய்யப்படுகின்றன.

கே.சோமசுந்தரம் சந்தை ஒழுங்கை- அம்மன் வீதி சந்தி, சுதுமலை வடக்கு மானிப்பாய்.

(8794)

## கருத்தரங்கு

கலைப்பீடத்தைச் சேர்ந்த சகல துறை ஆசிரியர்களுக்குமான பெறுமான மதிப்பீடுகளை அடிப்படையாகக கொண்ட கலைப்பீடத்தின் புதிய கற்கை நெறி அமைப்பு முறை பற்றிய கருத்தரங்கு நாளை புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான மூன்று தினங்களும் காலை 10.00 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக புவியியற்துறை மண்டபததில நடைபெறவுள்ளது.

மெய்யியல் துறை பேராசிரியர் என்.ஞானகுமாரன் மற்றும் பொருளியல் துறை பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் இடம்பெறவுள்ள மேற்படி கருத்தரங்கின் முதல் நாள் அமர்வு இராமநாதன் கலைப்பிரிவைச் சேர்ந்த நிரந்தர தற்காலிக வருகை விரிவுரையாளர்களுக்காகவும் இரண்டாம், மூன்றாம நாள அமர்வுகள் ஏனைய கலைப் பீட துறைசார் நிரந்தர விரிவுரையாளர்களுக்காகவும் நடாத்தப் படவுள்ளதாக கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (க-8)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

நெல்லியடிப் பிரதேசத்தில் எதிர்வரும 16 ஆம் திகதி வளர்ப்பு நாய்களுக்காக தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது.

அனறு காலை 9.00மணி - 10.30 மணிவரை இராச கிராமம் சனசமூக நிலையத்திலும் 11.00 - 12.00 மணி வரை முடக்கரை சுடர்ஒளி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 1.00 -2.30 மணி வரை நெல்லியடி திருஇருதய சன சமூக நிலையத்திலும் வைத்து தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 22 ஆம் திகதி நெல்லியடி நகரப்பகுதியிலும், 23 ஆம் திகதி இராசகிராமப் பகுதியிலும் கட்டாக்காலி நாய்கள பிடித்து அழிக்கப்படவுள்ளன. எனவே வளர்ப்பு நாய்களைக் கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்கப்படுகின்றார்கள். (க)



அகில இந்திய ரயில்வேயின் பொது மேலாளர்களின் இரண்டு நாள் கூட்டம் டில்லியில் நடைபெற்றபோது அனைத்து ரயில்வே பொது மேலாளர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் ரயில்வே துறையின் திட்டங்கள், செயல்பாடுகள், வருவாய் அதிகரிப்பு குறித்து ரயில்வே அமைச்சர் பேசினார்.

## பாரதிய ஜனதா கட்சியின் இரட்டைவேடம் செய்தி ஒலிபரப்பு அமைச்சர் கண்டனம்

குற்றப் பின்னணி அமைச்சர்களை நீக்கக்கோரும் பிரச்சினையில் பா.ஜ.க. இரட்டைவேடம் போடுவதாக மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் ஜெய்பால் ரெட்டி குற்றம்சாட்டியுள்ளார்.

குற்றப்பத்திரிகை தாக்கல் செயயப்பட்டுள்ள தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பற்றி பா.ஜ.க. பிரச்சினை எழுப்பாதது ஏன் என்று அவர் கேள்வியெழுப்பினார்.

சென்னையில் செய்தியாளார் கூட்டததில் பேசிய ஜெய்பால் ரெட்டி, குற்றப்பின்னணி அமைச்சர்கள் எனக் கூறி சில மத்திய அமைச்சர்களை இராஜிநாமா செய்யக் கோரும் பா.ஜ.க., தமிழ் நாட்டில் தமது கூட்டணிக் கட்சியின் தலைவரும் முதலமைச்சருமான ஜெயலலிதாவை இராஜிநாமா செய்யும்படி கேட்காதது ஏன் என்று கேள்வியெழுப்பினார். கடந்த 55 ஆண்டுகால இந்திய வரலாற்றில் மத்திய அரசில் இடம்பெற்ற குற்றப் பின்னணியுள்ள அமைச்சர் அத்வானி தான் எனக் கூறினர்.

ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத பற்றி எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் கால்நடைத் தீவனவழக்கில் சி.பி.ஐ.அவர் மீது வழக்குத் தொடுத்தவுடனேயே அவர் ராஜிநாமா செய்ததாகவும், அத்வானி மீது அயோத்தி வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த பிறகும் அவர் பதவி விலகவேண்டுமென்று நினைக்கவில்லையென்று ஜெய்பால ரெட்டி குற்றச்சாட்டினார். (து)

## நக்கீரன் கோபால் மீதான பொடா வழக்கில் புதுத் திருப்பம்

பத்திரிகையாளர் நக்கீரன் போபால் மீதான பொடா வழக்குக் குறித்த ஆவணங்களை இன்னும் மூன்று நாட்களுக்குள் அவருக்குக வழங்கவேண்டுமென்று தமிழக அரசுக்கு மத்திய பொடா மறு ஆய்வுக்குழு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாகப் புதுடில்லியில் பொடா மறு ஆய்வுக்குழு முன்பாக விசாரணை நடைபெற்றபோது நக்கீரன் கோபால் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சண்முகசுந்தரம் தமது கட்சிக்காரர் மீது பொடா சட்டத்தின் கீழ் பொய் வழக்குப் போடப்பட்டிருப்பதாகக் கூறி, இது தொடர்பான உண்மையை அறிய வழக்குத் தொடர்பான ஆவணங்களைத் தரும்படி தமிழக அரசுக்கு உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக கொண்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழக அரசு வழக்கறிஞர் மாததூர் குற்றப்பத்திரிகை தாக்கல் செயயப்படும்வரை ஆவணங்கள் தரப்படாது என்பது சட்டம் எனக் கூறினார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பொடா மறு ஆய்வுக் குழு வழக்குத் தொடர்பான ஆவணங்களை மூன்று நாட்களுக்குள் நக்கீரன் கோபாலுக்குத் தரவேண்டுமென்று தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. (து)

## இந்தியச் செய்திகள்

## மாத்திரை சாப்பிட்டோர் மரணம் பற்றி தமிழக அரசிடம் அறிக்கை கோரப்படுகிறது

(சென்னை)

யானைக் கால் நோய் தடுப்பு மாத்திரை சாப்பிட்ட 8 பேர் பலியாகியிருப்பது பற்றி விரிவான அறிககை அளிக்குமாறு தமிழக அரசைக் கேட்டிருப்பதாக மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு வழங்கிய இம் மாத்திரைகளைச் சாப்பிட்டதில் திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டக்கைச் சேர்ந்த 6 பேர் கடந்த சில தினங்களில் உயிரிழந்துள்ளனர்.

இது பற்றி ஏற்காட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் டாக்டர் அன்புமணி, தமிழக அரசு வழங்கிய மாத்திரைகளால் ஏற்பட்ட உயிரிழப்பு குறித்து விரிவான அறிக்கை கேட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில் இம் மாத்திரை சாப்பிட்டதால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த புதுக்கோட்டை மாவட்டம் ஆசபுட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் நேற்று முன் தினம் அதிகாலை உயிரிழந்தார். இதேபோன்று திருவண்ணாமலை அருகே ராஜேஸ் என்ற 8 ஆம் வகுப்பு மாணவனும் நேற்று முன் தினம் காலை பலியானான்.

மேலும், திருவண்ணாமலை, புதுக்கோட்டையில் 4 பேர் யானைக் கால் நோய் தடுப்பு மாத்திரை சாப்பிட்டதால் பாதிப்பு ஏற்பட்டு மருத்துவ மனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்கள். (கு)


# ...ய தேர்த் திருவிழா காட்சிகள்







...ர்: ஐங்கரன்,
சிவசங்கர்





















## நல்லூரான் திருவடிக்கு



தீர்த்தத் திருவிழா

### திளைத்தாடு கின்றோம்தீர்த் தநன்னீர்

கண்ணீரும் கம்பலையும் கவலையுமே
காலையும் மாலையும் கடுகிவர
உண்ணீரும் உணவு முறக்கமின்றி
உயிரூச லாடுவது னக்கழகோ
தெண்ணிலா வேணியார் திருக்குமரா
திருநெல்வே லியயல்வாழ் நல்லூரா
திண்ணம் தீர்ந்தோம் தீயவென்று
திளைத்தாடு கின்றோம் தீர்த் தநன்னீர்

சிவ.சண்முகவடிவேல்
ஏழாலை

### பேரின்ப ஊற்றுக்கள்

ஆறு முகம் கூறும்
அழகான தத்து வங்கள்
பேறுதனை யாற்று கின்ற
பேரின்ப ஊற் றுக்கள்

தமிழினத்தின் தலை விதியை
தரணியிலே நிர் ணயிக்கும்
உமையவளின் புத் திரனே!
உனைக்காண உழல் கின்றேன்
காலச் சுழற்சி தனில்

கவலை கலைந் தோட
கோலத் திரு முருகன்
வேலைத் தொழு திடுவோம்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

### நல்ல தீர்வு தருவாய் முருகா!

முருகா! முத்துக் குமரா! நல்லைத்
திருவே! தமிழன் தலைவா! திருமால்
மருகா! எங்கள் துயரம் போக்கத்
தருவாய் நல்ல தீர்வதனையே

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

### முருகன் ஆடும் தீர்த்தம்

சூரியன் கதிரில் சுடர்விடும் நதியில்
சுந்தர முருகன் ஆடும் தீர்த்தம்
சூரியன் புமியில் அனல்விடும் நதியில்
ஆனந்த முருகன் ஆடும் தீர்த்தம்

வேலுடன் குளித்து வெற்றிகள் குவிக்கும்
வாரணன் தம்பி மூழ்கிடும் தீர்த்தம்
பாலுடன் பழம் பன்னீர் குவிக்கும்
பைந்தமிழ் குமரன் குளித்திடும் தீர்த்தம்

தமிழீழ பாரதி

### விடுதலை தருவாய் வேல் முருகா

நல்லையிலே கோயில் கொண்ட மால்மருகா முருகா
வல்லமை தருவாய் நீ பகை வென்றிடவே
தொல்லை வினைப்பயனால் வாடுகிறான் தமிழன்
கல்லைக் கனியாக்கும் வேல் முருகா! தருவாய்விடுதலை!

க.ந.பாலசுப்பிரமணியம்
ஏழாலையுர்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறுவர்களை கைதுசெய்யவேண்டாம்

## சிறுவர் பாதுகாப்பு நிதியம் அரசிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறுவர்கள் கைது செய்யப்படும் சூழ்நிலையைத் தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்திடம் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வேண்கோள் விடுத்துள்ளது.

வளர்ந்தவர்களால் உருவாக்கப்படும் வன்முறைகளில் அறியாமையின் காரணமாகவே சிறுவர்கள் ஈடுபடுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள சிறுவர் நிதியத்தின் பேச்சாளர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் இருந்து சிறுவர்களை விலக்கிக்கொள்ளவேண்டும் என வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்குத் தாம் உத்தியோகபூர்வமான கோரிக்கையினை விடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ள அவர், இலங்கையில் சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக ஏனைய தொண்டு நிறுவனங்கள் விடுக்கும் அழைப்புக்கு தாம் தொடர்ந்து ஆதரவு வழங்குவதாகவும் தொிவித்தார்.

(க-121)

## ஜே.வி.பியின் கடும் எதிர்ப்பினையும் மீறி

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்த அரசு முயற்சி

(கொழும்பு)

ஜே.வி.பியின் எதிர்ப்பினையும் மீறி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன்படி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 49 சதவீதமான பஙகுகள இந்திய பெற்றோலிய நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டவுள்ளமையை ஏற்கனவே அறிந்து கொண்ட பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் இதற்கெதிராக ஜே.வி.பியின் ஆதரவுடன் நாடு தழுவிய பணிப் புறக்கணிப்பினை மேற்கொண்டிருந்தனர்.

இத்திடீர் பணிப்புறக்கணிப்பானது இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் பாரிய சிக்கலைத் தோற்றுவித்திருந்தது.

இதன் பின்னர் கூட்டுத்தாபன ஊழியர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்திய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கப்படாது என்ற உறுதிமொழி வழங்கியதையடுத்து இப் பணிப்புறக் கணிப்பு முடிவுக்கு வந்திருந்தது.

எனினும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்குகளை விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திர நடைமுறைகள் பூர்த்தியடைந்துள்ளதாகத் தற்போது தெரிவித்துள்ள திறைசேரியின் செயலாளர் சி.வி.விஜயசுந்தர இதனால பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின பங்குகளை விற்பனை செய்வதென்ற தீர்மானத்தை ரத்துச் செய்ய முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு இந்தியாவைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்களும் சீனாவைச் சேர்ந்த ஒரு நிறுவனமும் கேள்விப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருந்தன.

ஆனால், பாரத் எனப்படும் இந்திய நிறுவனம் அரசாங்கத்தால் பொருத்தமான நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டிருந்ததோடு பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையிலும் அது கைச்சாத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-121)

## ஆறுமுகம் தொண்டமானுக்கு அமைச்சுப் பொறுப்பு !

(கொழும்பு)

தறபோது ஆட்சிப் பீடத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைபபு அரசாங்கத்துடன் அண்மையில இணைந்து கொண்ட இலங்கைத தொழிலாளர் காங்கிரஸுக்கு மேலும ஒரு அமைச்சுப் பொறுப்பு வழங்கபபடவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின்தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கே இந்த அமைச்சர் பொறுப்பு வழங்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னதாக இவ்வமைச்சுப்பொறுப்பை அவர் ஏற்றுக் கொள்வார் என்றும் நம்பகமான தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கிரக நிலை சாதகமில்லாத காரணத்தினால் கட்சியின் தலை வர் ஆறுமுகம தொண்டமான் அமைச்சுப பொறுப்பை முன்னர் ஏற்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகினறது. நகர அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுப் பொறுப்பு அவருக்கு வழஙகப்படலாம் என்று தெரிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த முத்து சிவலிங்கம், தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சராகவும், அதே அமைச்சின் பிரதியமைச்சராக செல்லச்சாமியும் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-121)

## அரசியல் அமைப்பில் திருத்தம் செய்து

# பௌத்தத்தை தேசிய மதமாக பிரகடனம் செய்யவேண்டும் என்கிறது ஹெல உறுமய

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் அமைப்பில் திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலம் பௌத்த மதத்தை இலங்கையின் தேசிய மதமாக பிரகடனப்படுத்துமாறு ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்கான பிரேரணையினை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் அக்கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் கையளித்துள்ளார்.

இலங்கையின் பௌத்த மதத்திற்கு பிரதான இடம் வழங்கப்படுவதோடு பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதும், வளர்த்தெடுப்பதும் இலங்கையின் தலையாய கடமை என அரசியல் அமைப்பின் ஒன்பதாம் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எல்லாவல மேதானந்த தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் சனத்தொகையில் எழுபது சதவீதமானவர்கள் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால் பௌத்த மதத்தை தேசிய மதமாக பிரகடணப்படுத்துவதில் தவறில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பௌத்த மதம் தேசிய மதமாக்கப்பட்டால் அரசாங்கத்தால் பௌத்த மத விழுமியங்களின் படி ஒழுக முடியுமெனவும் அவர் மேலும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

(க-121)



**யாழ்.பல்கலைக்கழக பண்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை ஒற்றுமைக்கான மக்கள் அரங்கு என்ற தலைப்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் கலந்து சிறப்பித்த பேராசிரியர்கள், கல்விமான்கள், சமூக நலன் விரும்பிகள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரைப்படத்தில் காணலாம்.**

***குறிப்பு : நேற்றைய வலம்புரியின் 4 ஆம் பக்கத்தில் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டோர் என மேற்படி புகைப்படம் தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.***

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. - குறள்

வலம்புரி

# தேரர்களின் யாழ். விஜயம் சமாதானத்திற்கு உதவுமா?

தென்னிலங்கையைச் சேர்ந்த 45 பௌத்த தேரர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர். மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பும், நிறுவனமும் இணைந்து வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பௌத்த தேரகளுக்குத் தெரியப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலில் பௌத்த தேரர்கள் மிக முக்கியமான புள்ளிகள். அவர்களின் கருத்துக்கள், கோரிக்கைகைள் இலங்கையின் அரசியல் செயற்பாடுகளில் பெரும்பங்கு வகிப்பது யாவரும் அறிந்த உண்மை.

அந்தவகையில் பௌத்த தேரர்களை ஒதுக்கி வைத்துவிட்டு இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகண்டுவிட முடியாதென்ற உண்மையும் இங்கு உணரப்படவேண்டும்.

இலங்கையில் கடந்த இருபது வருடகாலமாக இனயுத்தம் நடப்பதற்கும், தமிழ்மக்களுக்கு எதிரான சிங்கள ஆட்சியாளர்களின் வன்முறைகள் உச்சமடைவதற்கும் பௌத்த தேரர்களின் ஆசியும், ஆதரவும் கணிசமான இடத்தை வகித்திருந்தது.

எனவே பிரச்சினைக்கு யார் தூபம் இடுகிறார்களோ அவர்களை முதலில் சமாளிப்பதும், கட்டுப்படுத்துவதும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான வழியாகும்.

அதன் பிரகாரம் வடபகுதியில் பிரச்சினைபற்றி பௌத்த தேர்களுக்கு தெரியப்படுத்துவது - தெளிவுபடுத்துவது அவசியமானதெனிலும் - கடந்த இருபது வருடகால யுத்தத்தால் தமிழ் மக்கள் எத்துணை துன்ப துயரங்களை அனுபவித்துள்ளனர் என்ற தகவலை எந்தப் பிக்குவும் இதுவரை அறியாமல் இருக்கமுடியாது.

பௌத்த மதத் தலைவர்கள் என்ற ரீதியிலும் கௌதம புத்தபிரானின் போதனைகளை பின்பற்றுவதற்காகத் துறவுபூண்டவர்கள் என்ற வகையிலும் இலங்கைப் பிரஜைகளான தமிழ்மக்கள் யுத்தத்தின் கொடூரத்தால் அனுபவித்தவற்றை அறியாமல் இருப்பது அவர்களின் கொள்கைக்கும் கௌதம புத்தரின் போதனைக்கும் உகந்ததல்ல.

இருந்தும் நித்திரை கொள்பவனை எழுப்பலாம், நித்திரைபோல் நடிப்பவனை எழுப்பமுடிய[illegible]தென்ற தமிழ்ப் பழமொழி கூறும் தத்துவம் பௌத்த தேர்களின் விடயத்தில் மிகவும் பொருத்துடையதாக இருப்பதால்,

வடபகுதி மக்களின் பிரச்சினைகளை அவர்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய ஓர் தார்மீகக் கடமை இருக்கவே செய்கிறது. எதை எடுத்துக் கொண்டாலும் அதில் நல்லதும், தீயதும் இருக்கவே செய்யும். இது உலகப் பொதுநியதி. அந்த நியதிக்கு இலங்கையின் பௌத்த தேரர்கள் மட்டும் விதிவிலக்கானவர்கள் அல்லர்.

அவ்வகையில் பௌத்த தேரர்களிலும் அன்புடையவர்களும், வன்புடையவர்களும் இருக்கவே செய்கின்றனர். இருந்தும் தமிழர்கள் மீது அன்பு செலுத்தக்கூடியவர்கள் - தமிழர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டவர்கள் - தமிழ்மக்களும் இந்த நாட்டில் சிங்கள மக்கள் போன்று வா[illegible]வேண்டுமென நினைப்பவர்கள் என்ற வகையில் [illegible]ளத்த தேர்களில் இருக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை மிகவும் சொற்பமானதே .

இருந்தும் பௌத்த தேரர்களிலும் மேற்போந்த உணர்வுடன் இருக்கின்றவர்களை நாம் ஒதுக்கிவிடலாகாது. அந்த நல்ல உள்ளம்கொண்டவர்களை இனங்கண்டு அவர்களின் ஊடாக உண்மைநிலையை தென்னிலங்கை மக்களுக்குத் தெரியப்படுத்துவது கட்டாய தேவையாகும்.

ஆக, யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் பௌத்த தேரர்கள் உண்மைநிலையை உணர்ந்து அதனைத் தென்னிலங்கை மக்களுக்குத் தெரியப்படுத்தும் பணியைச் செய்ய முன்வரவேண்டும்.

# ஐ.ம.சு.முன்னணி அரசின் ஆட்சி தொடருமானால் மிகமோசமான நிலைக்குள் நாடு தள்ளப்படும்

## திஸநாயக்கா எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது ஆட்சிப் பீடத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இன்னும் சில மாதங்கள் ஆட்சியில் இருக்குமானால் நாடு மீண்டும் ' கியூ முறைக்குள் தள்ளப்பட்டவிடும் என எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸ நாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளா மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் விவசாயத்துறை உட்பட்ட முக்கிய துறைகள் அனைத்தும் இவ் அரசாங்கத்தினால் பாழடிக்கப்பட்டுள்ளன.

பொய்மைகளின் வடிவமாக இவ் அரசாங்கம் நிகழ்கின்றது.

என அவர் மேலும் தெரிவித்தாரர்.

இம் மாநாட்டில் கலந்த கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கருத்து தெரிவிக்கையில்

ஆளும் கூட்டணி அரசாங்கம் தாங்கள் பொய் வாக்குறுதிகளை வழங்கு வதில்லை எனத் தெரிவித்த வண்ணம் தொடர்ந்தும் பொய்களையே கூறிவருகின்றது.

குறிப்பாக ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சிப் பீடம் ஏறும் போது இவ் அரசாங்கம் அரசாங்கத்துறை சார்ந்த ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதாக வாக்குறுதி வழங்கியதே தவிர அதனை இன்னமும் நிறைவேற்றவில்லை எனக் சுட்டிக்காட்டியுள்ளார். (க-121)

## சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளை ஜே.வி.பி.சந்திக்கும்!

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளைச் சந்திக்க ஜே.வி.பி தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது பொருளாதாரக் கொள்கைகள் குறித்து விளக்கங்களைக் கொடுப்பதற்காகவே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கட்சித் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடன், நிதியத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் அமைச்சர் விஜித ஹேரக் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ய ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட்ட முக்கிய அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படுவதில் முரண்பட்டிருக்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்குள் ஜே.வி.பி. தமது இடது சாரிப் பார்வையில் இலங்கையின் பொருளாதாரம் மறுசீரமைக்க வேண்டும் என இச் சந்திப்பில் வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-121)

## யாழ். மத்திய கல்லூரி நவோதயா திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டது

(கொழும்பு)

நவோதயா திட்டத்திற்கென நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 397 பாடசாலைகளில் மத்திய அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற தேசியத் தரத்திலான 25 பாடசாலைகள் நீக்கப்படவுள்ளன.

இதற்குப் பதிலாக கிராமப்புறங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 25 பாடசாலைகள் நவோதயா திட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ளதாக நவோதயா பாடசாலைத்திட்டத்தின் வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பாளரும் மேலதிக கல்விப் பணிப்பாளருமான ரி. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நவோதய திட்டத்தில் இருந்து நீக்கப்படும் பாடசாலைகளில் 6 பாடசாலைகள் வடக்கு-கிழக்கில் உள்ளன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வவுனியா தமிழ் மகாவித்தியாலயம், திருகோணமலை சிங்கள மகாவித்தியாலயம், காத்தான்குடி மத்திய கல்லூரி,மன்னார் புனித சபேரியார் ஆண்கள் மற்றும் பெண்கள் பாடசாலை ஆகியனவே அப்பாடசாலைகள் ஆகும்.

மத்திய கல்வி அமைச்சின் கீழ் இருக்கும் தேசியப் பாடசாலையைப் போன்று கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் போதிய வளங்கள் கிடைக்கச் செய்[illegible]ம் நவோதயா திட்டத்தில் தேசியப் பாடசாலைகளை இணைப்பது அர்த்தமற்றது எனக். கருதியே இந்தப் பாடசாலைகள் நீக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-61)

## மினிபஸ் கட்டண முரண்பாடு குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது

(மருதங்கேணி)

யாழ.குடாநாட்டில் சேவையிலீடுபடும் தனியார் மினிபஸ்களின் சேவைக் கட்டணங்களை உயர்த்துவது தொடர்பாக எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். அரச செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபருடன் மினிபஸ் சங்கங்களின் பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றுவர்.

தனியார் மினிபஸ் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் யாழ். மாவட்ட தனியார் மினிபஸ் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அதிகரித்த கட்டணப் பட்டியலுக்கும் வடபிராந்தியப் போக்குவரத்து சபையின் அதிகரித்த கட்டணத்திற்குமிடையே முரண்பாடுகள் இருப்பதாக தனியார் மினிபஸ் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனையடுத்தே, இம்முரண்பாடுகள் குறித்து விளக்கமளிக்க சந்தர்ப்பம் தருமாறு தேசிய ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிரதிநிதி,அரசாங்க அதிபரை கேட்டுள்ளார்.

இது தொடர்பாகவே எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரச செயலகத்தில் அரசாங்க அதிபருக்கும் தனியார் மினிபஸ் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற்று, தனியார் மினிபஸ் கட்டணங்கள் இறுதி தொடர்பாக இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது.

அதன் பின்னரே ஒவ்வொரு பகுதிக்கான சேவையில் ஈடுபடும தனியார் மினிபஸ்கள் அறவிடவேண்டிய கட்டணம் குறித்த அறிவித்தல்கள் பஸ்வண்டியில் ஒட்டப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-35)

## எரிவாயுவின் விலையை அதிகரித்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நுகர்வோர் அதிகார சபையின் அனுமதியைப் பெறுவதற்குமுன் வீட்டுப் பாவனைக்குரிய எரிவாயுவின் விலையை அதிகரித்த எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தொடரவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் லால் அபேய குணரத்தின தெரிவித்துள்ளார்.

எரிவாயு விலையை நுகர்வோர் அதிகார சபையின் அனுமதியின்றி அதிகரித்ததிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பான கடிதங்களை சட்டமா அதிபர் கமலசபேசனிடம் நேற்று ஒப்படைத்தகவும் அவர் கூறினார்.

இதேவேளை சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பது குறித்து, எரிவாயு நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபையிடம் அனுமதி கோரியிருந்தன.

ஆனால் அனுமதி கோரி சமர்ப்பித்திருந்த போது அதில் உள்ள பட்டியலிலும் தகவல்களிலும் பல குறைபாடுகள் இருந்ததாகக் கூறிய நுகர்வோர் அதிகார சபை அதற்கான பதிலை தாமமாகவே அனுப்பியிருந்தது.

இந்தப் பதில் கிடைப்பதற்கு முன்னர் எரிவாயு நிறுவனங்கள் விலை அதிகரிப்பை மேற்கொண்டு விட்டதாக நுகர்வோர் அதிகார சபை குற்றஞ்சாட்டியுள்ளது. (க-61)

## கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டவர் 23ஆம் திகதி பொலநறுவை நீதிமன்றில் ஆஜர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த 26ஆம் திகதி கைக்குண்டுடன் கைது செய்யப்பட்ட இராணுவ உளவாளியான சுப்பிரமணியம் யோகநாதன் என்பவரை, பொலநறுவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பின் நிமித்தம் பொலனறுவை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட உளவாளியை, கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி இவ் உத்தரவைப் பிறப்பித்தார்.

இவரை பொலனறுவை சிறைச்சாலையிலிருந்து மட்டக்களப்புக்கு அழைத்து வருவருதில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் இருப்பதாக சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தார். இந்த உத்தரவை ஏற்றுக்கொண்ட நீதிபதி குறிப்பிட்ட சந்தேக நபரை எதிர்வரும் 23ஆம் திகதி பொலனறுவை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிட்டார். (க-8)

## சச்சுமாஸ்ரர் கொலைச் சந்தேகநபர் 20ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராவார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா குழுவைச் சேர்ந்த சச்சு மாஸ்டர் உட்பட இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான மகேந்திரன் புவிதரனை எதிர்வரும் 20ஆம் திகதி மட்டக்களப்பு நீதிமன்றில ஆஜர்படுத்துமாறு நீதிபதி எம்.எச். எம். அஜ்மீர் உத்தரவிட்டார்.

தற்போது பதுளைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுளள புவிதரனை இரு தடவைகள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை. நீதிமன்றத்திற்கு அழைத்துவருவது தொடர்பில் பல பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாலேயே அவரை ஆஜாபடுத்த முடியாதிருந்ததாக சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்திற்கு தெரிவித்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட மட்டக்களப்பு நீதவான் நீதிபதி எதிர்வரும் தவணையின் போது கட்டாயம் ஆஜர்படுத்த வேண்டுமென உத்தரவிட்டார். (க-8)

## ௐ தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

துறக்க வேண்டிய உலகம் எது? அது இங்கேயே இருக்கிறது .அதை நம்முடனேயே தூக்கிக் கொண்டு அலைகிறோம். அதுதான் நமது உடம்பு. இந்த உடம்பிற்காகத்தான் அதை நேர்த்தியாக வைத்துக்கொண்டு அதற்குக் கொஞ்சம் சுகம் கொடுப்பதற்காகத்தான் நான் அடுத்தவன் மீது கை வைக்கிறேன்.இந்த உடம்பிற்காகத்தான் நான் மற்றவர்களைத் துன்புறுத்துகிறேன் தவறுகள் செய்கிறேன்.

சுவாமி விவேகானந்தர்

## திஸநாயக்காவின் மனு நிராகரிப்பு

தம்மீது லஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டுவருகின்ற விசாரணைகளை நிறுத்துமாறுகோரி பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்க தாக்கல் செய்த வழக்கை உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

எஸ்.பி.திஸநாயக்க சமுர்த்தி அமைச்சராக இருந்தபோது சமுர்த்தியைப் பயன்படுத்தி டைனிஸியா வங்கியில் பங்குகளை கொள்வனவு செய்தமை, 60 மில்லியன் ரூபா செலவில் ஆடம்பர வீடொன்றைக் கட்டியமை தொடர்பாக லஞ்சஊழல் குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

லஞ்ச ஊழல் குற்றத் தடுப்புப் பிரிவினரின் விசாரணைகள் தமக்கும் தமது உறவினர்களுக்கும் பாரபட்சமானமுறையில் நடைபெறுவதாகவும் தெரிவித்தார். (ம)

# இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும்

## இந்திய கடற்படைத்தளபதி அருண்பிரகாஷ் உறுதி

(கொழும்பு)

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டுள்ள இந்திய கடற்படைத் தளபதி நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

அலரி மாளிகையில் நேற்று பிரதமருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் பூரண ஒத்துழைப்பு மேலும் கிடைக்குமென்று இந்திய கடற்படைத்தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்படைத் தளபதி அருண் பிரகாஷுக்கு கடற்படைத் தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இலங்கை, இந்திய கடற்படைத் தளபதிகள் இருவரும் கடற்படைத் தலைமையகத்தில் இரண்டு நாடுகளின் கடற்படை நடவடிக்கை குறித்துக் கலந்துரையாடினர்.

இதேவேளை இராணுவத் தலைமையகத்திற்கு விஜயம்செய்த கடற்படைத் தளபதிக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது. (இ-121)

# எழுதுவினைஞர்களுக்கு நியமனம் வழங்கத் திறைசேரி அனுமதி

## ஒக்டோபரில் நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

அரச சேவையில் 2 ஆயிரத்து 668 எழுதுவினைஞர்களை நியமிப்பதற்கு திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது.

எழுதுவினைஞர்களை நியமிப்பதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் திறைசேரி அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

இந்நியமனத்தில் அங்கவீனர்களுக்கு மூன்றுவீத அனுமதி வழங்கப்படவுள்ளது.

எழுதுவினைஞர்களை நியமனம் செய்வது தொடர்பாக எதிர்வரும் 25 ஆம் திகதியிலிருந்து அடுத்த மாதம் 9 ஆம் திகதிவரையான சனி, ஞாயிறு தினங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டவுடன் தகுதியானவர்களுக்கு டிசம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன. (ச)

## சூட்டுக் காயத்துடன் அனுமதி

(கொழும்பு)

சூட்டுக்காயங்களுக்கு இலக்கான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் காலில் காயமடைந்த நிலையில் நேற்று நண்பகல் அனுமதிகப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நபர் ஈழப்பிரியன் என வைத்தியசாலையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள இவருக்கு தீவிர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச)

# நல்லூர் தேர் உற்சவத்தில் பெற்றோரைத் தவறவிட்ட சிறுமியின் நகைகள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச் சூழலில் பெருந்திரளான பக்தர்கள் அலைமோதிய வேளையில், நெரிசலில் பெற்றோரைத் தவறவிட்ட சிறுமியை தந்திரமாகக் கதைத்து ஏமாற்றி அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும், காப்பையும் அபகரித்துச் சென்ற சம்பவம் நேற்று தேர் உற்சவத்தின்போது இடம்பெற்றது.

பிரஸ்தாப சிறுமி பக்தர் கூட்டத்திற்குள் பெற்றோரைத் தவறவிட்டதனால் துக்கம் தாளாது அழுதுகொண்டு நின்றார்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய பலே ஆசாமி ஒருவர் சிறுமிக்கு அருகில் சென்று அவரை அழவிடாமல் தேற்றியவாறு பிரஸ்தாப சிறுமியிடம் அவரின் தந்தை தனது நண்பர் என்று கூறியதுடன் சிறுமியைப் பெற்றோரிடம் அழைத்துச் செல்வதாகக்கூறி அரசடி சந்திவரை கூட்டிச்சென்று அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்துக்கொண்டு நைசாக நழுவிவிட்டார்.

பின்னர் அங்கிருந்து பக்தர் ஒருவரினால் பிரஸ்தாப சிறுமி நல்லூர் உற்சவ காலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டார்.

அங்கு சிறுமியின் பெற்றோர் வந்து மகளைப் பொறுப்பேற்றுக்கொண்டனர். அவர் அணிந்திருந்த ஒன்றரைப்பவுண் தங்கச் சங்கிலியும், ஒருபவுண் காப்பும் அபகரிக்கப்பட்டதாக பெற்றோர் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் புகையிரதநிலைய வீதி கச்சேரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுபாஜினி (வயது 9) என்ற சிறுமியின் நகைகளே அபகரித்துச் செல்லப்பட்டதாகும். (இ)

## கரம்பன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக

# யாழ். கண்காணிப்புக் குழுவிடம் ஈ.பி.டி.பியினர் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

கரம்பொனில் ஈ.பி.டி.பி உறுப்பினர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்தி தீர்க்கமான முடிவைத் தெரிவிக்குமாறுகோரி ஈ.பி.டி.பியினர் நேற்று யாழ். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

ஈ.பி.டி.பியினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தவேண்டும் எனவும் ஈ.பி.டி.பி கோரிக்கை விடுத்துள்ளது.

கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் மகஜர் கையளிப்பதற்காக ஈ.பி.டி.பியினர் அங்கு சென்றபோது பெருமளவான இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டு இருந்தனர்.

இதேவேளை, சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினரான ஆறுமுகம் அருள்தாஸின் சடலம் நேற்று உறவினரிடம் கையளிக்கப்பட்டு வடமராட்சி கொட்டடி மயானத்தில் புதைக்கப்பட்டது. இந்த மரணச்சடங்கு நடைபெற்றவேளை அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-19,05,104)

## யாழ்ப்பாணத்தில்...

தடைப்பட்டுள்ளபோதும், சமாதான செயலகம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அவ்வப்போது தொடர்புகளை ஏற்படுத்தி சமாதான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் அனைத்தையும் கூடியளவு கரிசனையுடன் எடுத்துவருகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உலர்உணவு நிவாரண உதவி நிறுத்தப்பட்டாலும் அடுத்த ஆண்டிலிருந்து சமுர்த்தித் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்நிலையில் கடந்த அரசாங்கம் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 25 ஆயிரம் ரூபாவை வழங்கிய பின் அவர்களுக்கான உலர் உணவை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமையை நாம் ஆதரித்தோம். பெருந்தொகைப் பணத்தினை உலர்உணவு நிவாரணத்திற்கு செலவிடுவதை விடுத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது.

எனவே, குடாநாட்டு மக்களின் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டாலும் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக்கு நிச்சயமாகப் பயன்படுத்துவோம்.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டமையை அடுத்தே நாம் டீசல் விலையை அதிகரித்தோம். இதனால் போக்குவரத்துச் செலவு, மின் கட்டணம், செல்காஸ் என்பவற்றின் விலைகள் அதிகரித்துள்ளது. ஏ9 கண்டிவீதியூடாக போக்குவரத்தை இரவு ஏழு மணி வரை நீடிப்பதற்கும் நாம் ஆலோசனை செய்துவருகிறோம். இதன்மூலம் உணவுப் பொருட்களின் விலைகளை ஓரளவு குறைக்க முடியும்.

வடக்குக் கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை குறித்து அரசு முக்கிய கவனம் செலுத்திவருகின்றது. இதேபோல், தமிழகத்தில் உள்ள 60 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளில் யு.என்.எச்.சி.ஆர். வருடந்தோறும் 5 ஆயிரம் அகதிகளை இலங்கைக்கு அழைத்துவருகிறது. இதனை இருமடங்காக்கும்படி அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். இந்நிலை மத்திய அரசின் உதவியுடன் அகதிகளை விமானம் மூலம் கூட்டிவரவும், அவர்களது உடைமைகளை கப்பல் மூலம் எடுத்துவரவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்றும் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம-05,19)

## நெதர்லாந்து...

துவபீடத் தலைவர் எம்.நடராஜசுந்தரம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், நிக்கொட் திட்ட இணைப்பாளர் லங்காநேசன் உட்படப் பலர் உரையாற்றினர்.

பின்னர் நிக்கொட் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கென 60 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லையும் நாட்டிவைத்தார்.

வடமராட்சிப் பகுதியில் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டதுடன், இராணுவத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை துறைமுகத்தையும் பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவருடன் நெதர்லாந்து தூதரக முதலாவது செயலாளர் எஸ்.குஷ்ஹம், வடக்குக் கிழக்கு மாகாண நிக்கொட் திட்ட இணைப்பாளர் லங்காநேசன் உட்படப் பலர் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-52)

## இந்திய கடற்படைத்...

விஜயம் செய்யவுள்ள இவர், இலங்கைக் கடற்படையினருக்கான புதிய கடற்பயிற்சி வியூகங்கள், பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து விளக்குவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமைகளை நேரில் கணிப்பிடுவதற்காக தளபதி அருண்பிரகாஷ் யாழ். குடாநாட்டுக்கு இரகசிய விஜயம் மேற்கொண்டு பலாலி, காங்கேசன்துறை, முகமாலை ஆகிய பிரதேசங்களையும், உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளையும் பார்வையிடுவார் எனத் தெரியவருகிறது. (இ)

## ஹரீம் பீரிஸ் குழுவினர்...

குருநகர் பகுதிக்கு விஜயம்செய்த ஹரீம் பீரிஸ் அப்பகுதி மக்களின் குறைகளை கேட்டறிந்ததுடன், அவர்களின் அடிப்படைத் தேவையான வீடமைப்புத் திட்டம் தொடர்பாக ஆராய்ந்த அவர் 66 ஆயிரம் ரூபாவாக இருந்த வீடமைப்புத் திட்டத்திற்கு தற்போது ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-05,19)

## எரிக் சோல்...

மற்றும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களை இன்றும் நாளையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார். இதனையடுத்து நாளை மறுதினம் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை, நாளை மதியம் எரிக் சோல்ஹெய்ம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

**உடன் தேவை**

விளம்பர, காப்புறுதி, சந்தைப்படுத்தல் துறைகளில் முன் னோடியான விற்பனை நிறுவனத்திற்கு பகுதிநேர, முழுநேர ஊழியர்கள் உடன் தேவை. நேரில் வரவும் (ஆண், பெண் இருபாலாரும்)

தொடர்புகளுக்கு :- குமரன் தொலைத் தொடர்பகம்
இல. 27, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 2765
222 5469
(c/521)

**Internet call பாவனையாளர்களே!**

Net 2 Phone
Go 2 call
டொலர்

மிகவும் குறைந்த கட்டணத்தில்,
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

1 நிமிடத்திற்கு ரூபா 2.49 மட்டுமே...

தொடர்புகளுக்கு:-
அருள் கொமினிக்கேசன்ஸ்
இல. 01 பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
T.Phone: 222 3536
(c/520)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.